பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 27 வெள்ளிக்கிழமை 19.09.2025 கதிர் 313

## இது ரகசியம் அல்ல!

ஆளும் அரசுத் தலைவர்களின் சொத்து விவரங்கள் வெளியாகி மக்களைப் பெரிதும் அதிர்ச்சியடைய வைத்துள்ளன. இதுவரையில் தமது சொத்து விவரங்களை ☞ 2

# கோடிகளின் அதிபதிகள் ஆளும் தலைவர்கள்

## அமைச்சர் சமரசிங்க - ரூ. 25 கோடி
## அரசுத் தலைவர் அநுர - ரூ. 5 கோடி
## பிரதமர் ஹரினி - ரூ. 2.5 கோடி
## சபாநாயகர் ஜகத் - ரூ. 8 கோடி
## அமைச்சர் நளிந்த - ரூ 9 கோடி
## அமைச்சர் விஜித ஹேரத் - ரூ 3 கோடி



2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் பிரகாரம் அரசுத் தலைவர்,பிரதமர்,சபாநாயகர் உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களில் ஒருசிலர் 2025 ஆம் ஆண்டுக்கான சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஆகியோரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய ☞ 2

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும்

### சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்து

தற்போது நடைமுறையில் உள்ள நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தை நீக்குமாறும் அல்லது சகல தரப்பினரதும் பங்கேற்புடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடப்பாடுகளுக்கு அமைவாக அச்சட்டத்தைத் திருத்தியமைக்குமாறு சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நிகழ்நிலைக்காப்புச்சட்டம் தொடர்பில் சர்வதேச ஜூரர்கள்ஆணைக்குழுவினால்வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பலரதும் விமர்சனத்துக்கு உள்ளான 2024 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில்திருத்தமுன்மொழிவுகளைசமர்ப்பிக்குமாறு இலங்கை ஆளும்தரப்புக் கோரியிருந்தது. அதன்படி எமது திருத்தப் பரிந்துரைகளை செப்டெம்பர் ☞ 6

## எனது சொத்து குறித்து விசாரிக்க ஆணைக்குழுவில் முறையிடவும்

### எதிர்க் கட்சிகளுக்கு அமைச்சர் சமரசிங்க சவால்

எனது சொத்துக்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் லஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கலாம். சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான சகல ஆவணங்களையும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன். எதனையும் மறைக்கவில்லை என வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் ☞ 6

## செம்மணியில் 3ம் கட்ட அகழ்வுக்கான செலவு மதிப்பீடு நீதிமன்றில் அளிக்கை

செம்மணி மனித புதைகுழியின் ஒரு பகுதியான அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்கான செலவு மதிப்பீடு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில், யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் சமர்ப்பித்துள்ளார்

செம்மணி மனித புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ☞ 6

## சர்வதேசப் பொறிமுறை ஊடாக மட்டுமே இலங்கையில் பொறுப்புக்கூறல் சாத்தியம்

### சர்வதேச குற்றவியல் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டு

இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் உள்ளகப்பொறிமுறை ஊடாகவன்றி, சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையின் ☞ 2

## சுயவிருப்பில் சேவையிலிருந்து விலகாதீர்கள் மின்சார சபை ஊழியர்களுக்கு வேண்டுகோள்

### ஐக்கிய மக்கள் சக்தி விடுத்தது

முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகராவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதே சட்டத்தையே வரையறுக்கப்பட்ட சில திருத்தங்களுடன் இந்த ஆளும்தரப்பும் முன்வைத்திருக்கிறது. பலவந்தமாக இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கும் ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. எவ்வாறிருப்பினும் ஆளும்தரப்பால் முன்மொழியப்பட்டுள்ள சுயவிருப்பில் சேவையிலிருந்து விலகுவதற்கான தெரிவிற்கு இணங்க வேண்டாம் என்று மின்சாரசபை ☞ 6

### கேகாலை சாந்த கொலை வழக்கில்

## கடற்படையைச் சேர்ந்த மற்றொரு முன்னாள் உளவு அதிகாரியும் கைது

கடற்படையின் முன்னாள் உளவுத்துறை பிரதானி ஓய்வுபெற்ற ரியர் அட்மிரால் சரத் மொஹட்டிசி.ஐ.டியினரால்கைதுசெய்யப்பட்டார்.

அலவ்வ பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சாந்த சமரவிக்ர அல்லது கேகாலை சாந்த என்பவரை பொலிஸாரின் துணையுடன் கடத்தி, காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பான விசாரணைகளில் வெளிப் படுத்தப்பட்ட சான்றுகளின் பிரகாரம், அப்போது திருகோணமலை கன்சைட் சித்திரவதை நிலத்தடிச் சிறையின் பொறுப்பதிகாரியாக இருந்தவராகக் கூறப்படும் கடற்படை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

## சுதந்திரக் கட்சி செயலர் வலியுறுத்து

அரசியலுக்கு அப்பால் எந்தவொரு வருமான மூலமும் அற்ற ஜே.வி.பியினர் எவ்வாறு இந்தளவுக்கு கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு அதிபதியாக இருக்க முடியும்? ஜே.வி.பி.யினரின் உண்மையான முகம் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாகாணசபைத் தேர்தலில் இதற்கான பதிலையும் வழங்க வேண்டும். எனவே விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துவதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வெளியிடப்பட்டுள்ள ஆளுந்தரப்பினரின் சொத்து விவரங்கள் குறித்து நாடு அதிர்ச்சியடைந்துள்ளபோதிலும், நாம் அதிர்ச்சியடையவில்லை. காரணம் ஜே.வி.பியினருக்குள்ள சொத்து விவரங்களை ஏற்கனவே நாம் அறிவோம். எவ்வாறிருப்பினும் தற்போது இது குறித்து மக்களுக்கு தெரியவந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. ஜே.வி.பியைத் தவிர வேறு எந்த கட்சியினரும் தாம் வறுமையிலிருப்பதாகக் கூறியதில்லை. ஆனால் இவர்கள் தம்மால் புதிய ஆடைகளைக் கூட வாங்க முடியாது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

இன்று வெளியாகியுள்ள சொத்து விவரங்கள் இவை அனைத்தும் பொய் என்பதை நிரூபித்துள்ளன. இவை பொய் என்பதற்கு அப்பால் மக்களை எந்தளவுக்கு ஏமாற்றியிருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது. தமது அரசியல் இலாபத்துக்காக மிகக் கீழ்தரமாக மக்களை ஏமாற்றியிருக்கின்றனர். எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்தால் இவர்களின் உண்மையான முகங்கள் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

இவர்கள் அமைச்சர்களுக்குரிய சம்பளத்தைப் பெறுவதில்லை எனக் கூறுகின்றனர். அமைச்சர்களின் சம்பளம் திறைசேரியில் மீதப்படுத்தப்படவில்லை. மாறாக ஜே.வி.பி. கட்சி நிதியத்தில் சேமிக்கப்படுகிறது.

சம்பளத்தை கட்சிக்கு வழங்கிவிட்டு அதற்கும் அதிகமான வருமானத்தை ஏதோ ஒரு வழியில் இவர்கள் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். அரசியலுக்கு அப்பால் எந்தவொரு தொழிலும் அற்ற இவர்களால் எவ்வாறு இந்தளவுக்கு கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு அதிபதியாக இருக்க முடியும்? மக்கள் இதனைப் புரிந்துகொள்ளவேண்டும்.

மாகாணசபைத் தேர்தலில் இதற்கான பதிலை மக்கள் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். ஆளும்தரப்புக்கு எதிரான எமது வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு சகல சுதந்திர கட்சி ஆதரவாளர்களையும் கேட்டுக் கொள்கின்றோம். விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

தாம் கூறுவதை செய்பவர்கள் என்பது உண்மையெனில் முடிந்தளவு விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று நம்புகின்றோம். தேர்தலுக்கு தயாராவதற்காக கட்சியின் மறுசீரமைப்பு பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம். மாகாணசபைத் தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம் என்றார்.

## இனி இது .....

வெளிப்படுத்தியுள்ள எல்லா ஆளும்தரப்புத் தலைவர்களும் கோடீஸ்வரர்கள்தான். அரசியல்வாதிகள் பண முதலைகள் என்பது மக்கள் அறியாததல்ல. ஆனால் கடந்த 30 வருடங்களில் ஒன்றரை வருடம் தவிர வேறு எப்போதும் அதிகாரத்திலோ பதவிகளிலோ இருக்காத இந்த முழு நேர அரசியல்வாதிகளான ஜேவிபியினர் மற்றும் என்பிபியினரிடம் எப்படி இத்தனை கோடி ரூபாய் சொத்துக்கள்? ஆட்சி அதிகாரத்தில் இல்லாமலேயே இவர்களிடம் இத்தனை கோடிகள் என்றால் இருந்திருந்தால் நிலமை என்ன என்றும் சிந்திக்க வைக்கிறது.

கொழும்பிலோ அல்லது அதனைச் சுற்றிய பகுதிகளிலோ ஒரு காணியும் வீடும் வைத்திருந்தால் அதன் பெறுமதியே கோடிகளில் வரும்தானே, அப்படியிருக்க ஆளும் தரப்பினரை கோடீஸ்வரர்கள் என்று சொல்லலாமா, அது அபத்தமில்லையா என்று கேட்டு நியாயப்படுத்துவதற்கும் சிலர் வருவார்கள். ஆனால், அதே கொழும்பில் ஒரு துண்டு நிலம்கூட இல்லாமல் தகரக் கொட்டகைகளில் வாழ்பவர்களும், சில பல லட்சங்கள் மட்டுமே பெறுமதியான தொடர் மாடி வீடுகளில் வாழும் நடுத்தர மக்களும் இருக்கும்போது, அவர்களிடம் இப்படிக் கோடிக் கணக்கில் சொத்துக்கள் இல்லாதபோது, அவர்களின் பிரதிநிதிகள் என்று தம்மை விழித்துக்கொண்ட, ஏழை மக்களின் பிரதிநிதிகள் இப்போதுதான் அதிகாரத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்த இவர்களிடம் மட்டும் எப்படி இத்தனை கோடிகளில் சொத்துக்கள் குவிந்தன என்பதே கேள்வி.

அதுவும் தவிர இவையெல்லாம் கணக்கில் காட்டப்பட்ட சொத்துக்கள். அதாவது அவர்களின் வருமானக் கணக்கிற்கு ஏற்ப அவர்களால் கணக்குக்காட்டக் கூடிய சொத்துக்கள். வருமானத்திற்கு அப்பால் இன்னும் இருக்கக்கூடிய இவர்களின் சொத்துக்கள் இனி அடுத்த ஒரு தரப்பு ஆட்சிக்கு வரும்போதுதானே வெளியாகும்.

இப்போது வெளியாகி இருக்கும் இவர்களின் சொத்து விவரங்களைப் பார்த்தே மக்கள் அதிர்ந்து போயிருக்கிறார்கள். எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானா என்று விதிர்த்துப் போயிருக்கிறார்கள். கொழும்பில் எதிர்க் கட்சிகள் மட்டுமே கொண்டாட்டமாக இருக்கின்றன. அவை மீண்டெழுவதற்கும் ஆளும் தரப்பைக் கவிழ்ப்பதற்கும் இந்த ஒரு விடயமே போதும் என்று அவை நினைக்கின்றன. தன்னைவிட ஆளும்தரப்பின் அமைச்சர் சமரசிங்கவின் சொத்து மதிப்பு அதிகம் என்று நாமல் ராஜபக்சவே சுட்டிக்காட்டுகின்றார். அதில் நியாயமும் இருக்கத்தானே செய்கிறது.

இதுவரையில் இலங்கையின் அரசியல் கொள்ளையர்களிலேயே சிறந்தவர்கள் என்று நம்பப்பட்டவர்கள் ராஜபக்சக்கள். அப்படி மக்கள் நம்புவதற்கான காரணங்களில் மிக முக்கியமானவர்கள் ஜேவிபியினர். ராஜபக்சக்கள் அரச சொத்துக்களைச் சூறையாடினார்கள், அவற்றை வெளிநாடுகளில் முதலிட்டுள்ளார்கள், வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்துள்ளார்கள் என்றெல்லாம் அவர்கள்தான் கதை கதையாக அடித்து விட்டார்கள். அப்படிச் சொல்லப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் வாழ்பவர்களைவிடவும் சொன்னவர்களின் சொத்துக்கள் அதிகம் என்பது தெரிய வரும்போது மக்கள் அதிர்ச்சியடையாமல் என்ன செய்வார்கள்.

எதுவுமே இல்லாத ஏழைகளின் உரிமைக்காகக் கோடீஸ்வரர்கள் குரல் கொடுப்பார்கள், போராடுவார்கள், நீதியைப் பெற்றுத்தருவார்கள் என்றெல்லாம் நம்புவது கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கின்றது. உலக வரலாற்றில் பல கோடீஸ்வரர்கள் அப்படி இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் ஏழை மக்களுக்காகப் போராட வந்தபோதே கோடீஸ்வரர்களாக இருந்தவர்கள். மக்களுக்கான போராட்டத்திலேயே தங்கள் பணத்தையெல்லாம் இழந்து சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியவர்கள். அப்படி என்பிபி ஆளும் தரப்பினரும் தமது பணத்தையெல்லாம் மக்களுக்காகச் செலவிட்டு, சமானியர்களாக ஆட்சியைவிட்டுத் திரும்புவார்களா?.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கோடிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தல்கள் தொடர்பில் சமூக கட்டமைப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் அரசுத் தலைவர், பிரதமர் உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் பிரகாரம் அரசியல்வாதிகள் தமது சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்த வேண்டும். இந்த விபரங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தனது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

இதற்கமைய அரசுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரங்களுக்கமைய அரசுத் தலைவர்யிடம் நிலையான சொத்து விவரத்தின் கீழ் 20 பேச்சர்ஸ் காணி மற்றும் வீடு; காணப்படுகின்ற நிலையில் அதன் மொத்தப் பெறுமதி 40 மில்லியன் ரூபாவாகும். 11 இலட்சத்து 25 ஆயிரம் பெறுமதியான தங்க ஆபரணங்கள் அரசுத் தலைவர்யிடமும், அவரது குடும்பத்தாரிடமும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அரசுத் தலைவரிடம் 15 மில்லியன் ரூபா பெறுமதியான டொயோடா வாகனம் ஒன்றும், அரசுத் தலைவர் மற்றும் அவரது குடும்பத்தாரின் மூன்று வங்கி கணக்குகளில் 13 இலட்சத்து 77 ஆயிரத்து 435 ரூபா வைப்பில் உள்ளதாகவும் அரசுத் தலைவரின் சொத்துக்களின் மொத்த பெறுமதி 5 கோடி 75 லட்சத்து 2 ஆயிரத்து 435 ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களில் வீடு மற்றும் காணியின் பெறுமதி 1 கோடி 5 லட்சத்து 55 ஆயிரத்து 615 ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தங்க ஆபணரங்களின் பெறுமதி 70 இலட்சம் ரூபாவாகவும், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் 68 லட்சத்து 42 ஆயிரத்து 604 ரூபா முதலீடு செய்துள்ளதாகவும், வங்கி கணக்கில் 40 லட்சத்து 82 ஆயிரத்து 302 ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய பிரதமரின் சொத்துக்களின் மொத்த பெறுமதி 2 கோடி 70 லட்சம் ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தன்னிடம் வாகனங்கள் ஏதும் இல்லை என்று பிரதமர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அறிக்கை அளித்துள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவின் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரத்தில் காணி மற்றும் வீட்டின் பெறுமதி 7 கோடி ரூபா, தங்க ஆபரணங்களின் பெறுமதி 33 லட்சத்து 58 ஆயிரத்து 800 ரூபா,70 லட்சம் பெறுமதி வாகனம், 4500 ஆஸ்ரேலிய டொலர் பெறுமதியான வாகனம், வங்கி கணக்கில் 31 லட்சத்து 214 ரூபா, கொமன்வெல்த் வங்கியில் 42.20 ஆஸ்ரேலிய டொலர் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், சொத்துக்களின் மொத்த பெறுமதி 8 கோடி 34 லட்சத்து 59 ஆயிரத்து 14 ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரத்தில் அவரிடம் 20 பேச்சர்ஸுடன் 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடு ஒன்று இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் பிமல் ரத்நாயக்க மற்றும் அவரது குடும்பத்தாரிடம் 13 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களும், 1.5 கோடி பெறுமதியான மோட்டார் கார் ஒன்றும், 10 வங்கிக் கணக்குகளில் 27 லட்சத்து 45 ஆயிரத்து 794 ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மொத்த பெறுமதி 2 கோடி 50 லட்சம் ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் விஜித்த ஹேரத்தின் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரத்தில் காணி மற்றும் வீட்டின் பெறுமதி 10 லட்சத்து 7 ஆயிரம் ரூபா, 2 கோடி 70 லட்சம் 00,000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனம், வங்கி கணக்கில் 5 லட்சத்து 75 ஆயிரத்து 276 ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அவரது சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 3 கோடி 75 லட்சத்து 82 ஆயிரத்து 276 ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரத்தில் காணி மற்றும் வீட்டின் பெறுமதி 5 கோடி 50 லட்சம் ரூபா, தங்க ஆபணரங்களின் பெறுமதி 31 லட்சம் ரூபா, வாகனத்தின் பெறுமதி 2 கோடி 13 லட்சம் ரூபா, வங்கி கணக்குகளில் 47 லட்சத்து 68 ஆயிரத்து 750 ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் அவரது சொத்துக்களின் மொத்த பெறுமதி 8 கோடி 41 லட்சத்து 68 ஆயிரம் 750 ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் வசந்த சமரசிங்கவின் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரத்தில் 23 கோடி 50 லட்சம் பெறுமதியான வாணிப கட்டிடம், 1 கோடி பெறுமதியான காணி மற்றும் வீடு. 65 லட்சம் பெறுமதியான சோலர் கட்டமைப்பு, 45 லட்சம் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்கள், 1 கோடி 50 லட்சம் பெறுமதியான வாகனம், வங்கி கணக்கில் 31 லட்சம் 53 ஆயிரத்து 850 ரூபா, எல்.ஓ.எல்.சி நிறுவனத்தில் 21,000 பங்குகள் (பெறுமதி குறிப்பிடப்படவில்லை), வருடாந்த வருமானம் 1 கோடி 53 லட்சம், டிஜிட்டல் நாணயம் 3000 அமெரிக்க டொலர் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரத்தில் 7 கோடி 60 லட்சம் ரூபாய் பெறுமதியான காணி மற்றும் இடம், வருடாந்த வருமானம் 96 லட்சம் 78 ஆயிரத்து 185 ரூபாய், வங்கி கணக்குகளில் 2 கோடி 19 லட்சத்து 33 ஆயிரத்து 367 ரூபா உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்க ஆபரணங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான விவரங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 2025 ஆம் ஆண்டுக்கான சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரங்களை ஆணைக்குழுவுக்கு (நேற்று முன்தினம்) சமர்ப்பிக்கவில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரத்தில் 55 லட்சம் ரூபா பெறுமதியான காணி மற்றும் வீடு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு சொகுசு மோட்டார் வாகனங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், அதன் பெறுமதி குறிப்பிடப்படவில்லை. அத்துடன் 3 கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்துள்ளதாகவும், வங்கிக் கணக்குகளில் 12 கோடி 40 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் சொத்துக்களின் மொத்த பெறுமதி 16 கோடி 85 லட்சம் ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரத்தில் 26 கோடி 80 லட்சம் பெறுமதியான காணி மற்றும் வீடு, 2 கோடி 20 லட்சம் பெறுமதியான வாகனங்கள், 1 கோடி 40 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்கள் இருப்பதாகவும் வங்கி கணக்குகளில் 75 லட்சம் ரூபா வைத்திலிடப்பட்டுள்ளதாகவும், சொத்துக்களின் மொத்த பெறுமதி 31 கோடி 15 லட்சம் ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரத்தில் 66 கோடி 20 லட்சம் ரூபாய் பெறுமதியான காணி மற்றும் வீடு, 12 கோடி 92 லட்சம் ரூபாய் பெறுமதியான வாகனங்கள் இருப்பதாகவும், நிதி சொத்துக்களாக 1 கோடி 41 லட்சம் 941 அமெரிக்க டொலர்களும், 2038 பிரித்தானிய பவுன்ஸ் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சர்வதேசப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக மாத்திரமே அர்த்தமுள்ள பொறுப்புக் கூறலை அடைந்துகொள்ளமுடியும் என சர்வதேச குற்றவியல் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசிய கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் ‘இலங்கையில் சர்வதேச பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்‘ எனும் தலைப்பிலான கலந்துரையாடலொன்று கடந்த வாரம் ஜெனிவா ஊடக அமையத்தில் நடைபெற்றது.

தேசிய கனேடியத் தமிழர் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ருக்ஷா சிவானந்தனால் தொகுத்தளிக்கப்பட்ட இக்கலந்துரையாடலில் சர்வதேச குற்றவியல் வழக்கறிஞரான அலைன் வேனர், சர்வதேச சட்டத்தரணி மரியம் பொஸ்டி, பாலியல் மற்றும்

தொடர்ச்சி 7ம் பக்கம்....

# குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சுகாதாரச் சூழல் மேம்படுத்தப்படும்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கர்ப்பிணித் தாய்மார், புதிதாகப் பிறந்த குழந்தை உட்பட அனைத்து குழந்தைக்கும் பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலை உறுதி செய்வதுடன் உகந்த முறையில் அவர்களுக்கான சுகாதார சேவை விரைவில் மேம்படுத்தப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார்.

உலக நோயாளர் பாதுகாப்பு தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கமைய இவ்வருட உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு சுகாதார அமைச்சரின் தலைமையில் புதன்கிழமை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

அந்த வகையில் இவ்வருடம் 'பிறக்கும் குழந்தைகள் உட்பட நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சுகாதார சேவையை வழங்குவது' என்னும் விசேட தொனிப்பொருளுக்கமைய உலக நோயாளர் பாதுகாப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்ட சுகாதார அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது:

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவையை பாதுகாப்பான முறையில் வழங்க வேண்டும் என்பதற்காக 2019 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தினால் உலக நோயாளர் பாதுகாப்பு தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாப்பது சமூகம் என்ற ரீதியில் எம் அனைவரினதும் கடமையாகும்.

சுகாதார ஊழியர்களின் அர்பணிப்பின் பயனாக தற்போது சிசு இறப்பு வீதம் குறைவடைந்துள்ளதுடன், நோயாளர் பராமரிப்பு சேவையும் உயர் தரத்தில் வழங்கப்படுகின்றது. சுகாதார சேவையை மாத்திரமல்லாது நோயாளர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது. மேலும் கர்ப்பிணித் தாய்மார், புதிதாகப் பிறந்த குழந்தை உட்பட அனைத்து குழந்தைக்கும் பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலை உறுதி செய்வதுடன் உகந்த முறையில் அவர்களுக்கான சுகாதார சேவை மேம்படுத்தப்படும்.

அதற்கமைய அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் தொடர்ச்சியாக பயிற்சித் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான ஆதரவையும் வழிகாட்டுதலையும் நேரடியாக வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

# ஐ.தே.க. தேசிய மாநாட்டில் ஐ.ம.ச. பொதுச் செயலாளர்

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளஎமக்கும்அழைப்புக்கிடைத்திருக்கிறது. அதில் எமது கட்சியின் பொதுச்செயலாளர் கலந்துகொள்வாரென ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்துகொள்ள இருப்பது தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கியதேசியகட்சியின்79ஆவதுஆண்டுநிறைவு விழாவுக்குஎமக்கும்அழைப்புவிடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம். அதனால் ஐக்கிய தேசிய கட்சியின் அழைப்பை ஏற்று ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி, கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அதில் கலந்துகொள்வார்.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்துசென்று வேறு கட்சிகளில் இணைந்துகொண்டவர்களின்கட்சிஉறுப்புரிமையை நீக்காமல்இருப்பதற்கும், ஒழுக்காற்றுநடவடிக்கைக்கு உள்ளானவர்களுக்கு அதனை மேற்கொள்ளாமல் இருப்பதற்கும்ஐக்கியதேசியகட்சிதீர்மானித்திருக்கிறது.

அதனையும் நல்லதொரு விடயமாகவே பார்க்கிறேன். என்றாலும் நாங்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமையை பெற்றுள்ளதால், ஐக்கிய தேசிய கட்சி உறுப்புரிமையை பெறமுடியாது. என்றாலும்இரண்டுகட்சிகளும்இணைந்துசெயற்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. அந்தக்கலந்துரையாடல்வெற்றியடையும்எனநாங்கள் நம்புகிறோம். என்றாலும் இந்த நடவடிக்கையை ஓரிரு தினங்களில் மேற்கொள்ள முடியாது. அதற்குச் சில காலம் செல்லும். என்றாலும் தற்போது இரண்டு கட்சிகளுக்கும் இடையில் சிறந்த புரிந்துணர்வு காணப்படுகின்றது.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான நட்புநடவடிக்கைகள் தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது.

இது நல்ல விடயம். அத்துடன் எதிர்வரும் தேர்தல்களில் இரண்டு கட்சிகளும் ஒன்றாகப் போட்டியுடுவதா? அல்லது கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் தேர்தல் ஒன்று வரும்போது தீர்மானிக்கப்படும் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும்தரப்பினரின் சொத்துக்கள் மக்களின் நம்பிக்கைக்குச் சவால்

இலங்கையின் ஆளும் தரப்பினரின் சொத்து விவரங்கள் நேற்று வெளிச்சத்திற்கு வந்துள்ளன. அதில், நாட்டின் உயரிய பதவிகளை வகித்துவரும் அரசுத் தலைவர், பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள் ஆகியோரின் சொத்து விவரங்கள் அடங்கியுள்ளன. இவற்றை வெளிக்கொணர்ந்த தகவல்கள், மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, இடதுசாரிப் பின்னணியில் இருந்து அரசியலுக்கு வந்தவர்களே இன்று கோடிக்கணக்கான சொத்துக்களின் உரிமையாளர்களாக இருப்பது, மக்கள் மனதில் கேள்விக் குறிகளை எழுப்பியுள்ளது.

இலங்கையில் அரசியல்வாதிகள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுவது, பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்றும் கடமைக்காகத்தான். ஆனால், பலரின் சொத்து விவரங்கள் பார்க்கையில், அந்தக் கடமை மறந்து தனிப்பட்ட செல்வச் சேர்க்கை மட்டுமே பிரதான நோக்கமாக மாறியிருப்பது கடந்த காலங்களில் வெளிப்படையாகத் தெரிந்தது. சில ஆண்டுகளுக்கு முன் அரசியலுக்குள் நுழைந்தவர்கள்கூட இன்று பல வீடுகள், நிலங்கள், வணிக வளாகங்கள், வெளிநாட்டு வங்கிக் கணக்குகள், விலையுயர்ந்த வாகனங்கள் என பெரும் செல்வங்களின் உரிமையாளர்களாக மாறியுள்ளனர்.

இத்தகைய செல்வச் சேர்க்கைகள், சம்பளத்தின் அடிப்படையிலோ அல்லது சட்டபூர்வமான வருவாய் வழிகளின் அடிப்படையிலோ சாத்தியமில்லாதவை என்பது அனைவரும் அறிந்த உண்மையே. அப்படியிருக்க, இந்தச் சொத்துக்கள் எவ்வாறு உருவாகின? மக்களின் வியர்வையிலிருந்து களவாடப்பட்ட வரிவசூல்களா? பொதுத்திட்டங்களின் பெயரில் நிகழ்ந்த ஊழல்களா? அல்லது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திய வணிகச் சுரண்டல்களா? என்ற கேள்விகள் எழுவது இயல்பே.

இவையெல்லாம் சேர்ந்த எழுந்த வெறுப்பும் கோட்டாபய காலத்தில் ஆளும்தரப்புக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி வெடிப்பதற்குக் காரணமாக இருந்தது. அப்போதிலிருந்து இலஞ்சம், ஊழல் ஒழிப்பு மக்களின் மிக முக்கிய கோரிக்கையாக இருந்து வந்தது. அதனை அடிநாதமாகக் கொண்டு ஆட்சியைப் பிடித்த இன்றைய தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களே கோடீஸ்வரர்கள்தான் என்பதே இப்போது அதிர்ச்சிக்குரியது.

சமூகநீதி, தொழிலாளர் உரிமைகள், ஊழல் எதிர்ப்பு போன்ற முழக்கங்களை முன்வைத்து அரசியலில் அடியெடுத்து வைத்த இடதுசாரி பின்னணியினரைச் சேர்ந்த தலைவர்கள்கூட இன்று கோடீஸ்வரர்களாக மாறியிருப்பது மிகப் பெரிய முரண்பாடாகும். ஏழை மக்களின் வாக்குகளைக் கையாண்டு அரசியல் செய்து வந்தவர்களின் செல்வச் சேர்க்கை அதிர்ச்சியை ஏற்படுத்துவது இயல்பே!

இந்தச் சூழ்நிலையில் மக்களிடம் எழும் சந்தேகம் தெளிவானது— ‘அரசியல் என்றால் தனிப்பட்ட செல்வச் சேர்க்கைக்கான வாயிலா? பொதுநலன் என்ற பெயரில் தன்னை மறைத்துக் கொள்ளும் வியாபாரமா?’ என்பதே. இதற்கு விடை காண்பதற்கான பொறுப்பு நேரடியாக அந்தத் தலைவர்களுக்கே உண்டு. அவர்கள் தமது சொத்துக்களை எவ்வாறு பெற்றனர் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மிகவும் கவலைக்குரியது என்னவென்றால், ஊழல் தொடர்பில் விசாரணைகள் நடத்த வேண்டிய அமைப்புகள்கூட, அரசியல் அழுத்தங்களால் ஆளும்தரப்பு விடயங்களில் அமைதியாக நிற்கின்றன என்பதுதான். சட்டம் எல்லோருக்கும் சமம் என்ற கொள்கை நடைமுறையில் பின்பற்றப்படாமல், சாதாரண குடிமக்களுக்கு ஒரு விதி, அரசியல்வாதிகளுக்கு வேறு விதி என்ற நிலை தொடர்கிறதோ என்கிற சந்தேகம் ஏற்படுகின்றது. இதுவே மக்களின் நம்பிக்கையை முற்றிலும் சிதைத்து விடுகிறது.

இந்நிலையில், மக்கள் நலனுக்காகச் செயல்பட வேண்டிய ஜனநாயக அமைப்புகள் மீண்டும் உயிர் பெற வேண்டுமெனில், அரசியல்வாதிகளின் சொத்து விவரங்கள் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும். சட்டத்திற்குப் புறம்பாகச் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டு மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படவேண்டும். அதற்காகச் சட்டரீதியான சுயாதீன ஆணையங்கள் அவசியமாகின்றன.

மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள், தங்களது வாழ்க்கையில் எளிமையும் வெளிப்படைத்தன்மையும் கடைப்பிடிக்க வேண்டியது ஜனநாயகத்தின் அடிப்படை நெறியாகும். ஆனால், இன்றைய நிலையில் அது முற்றிலும் தலைகீழாகிப் போயுள்ளது. மக்கள் மத்தியில் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கான ஒரே வழி, அரசியல்வாதிகள் தமது சொத்து விவரங்களை வெளிப்படையாகக் கூறி, சட்டத்திற்கு முன்னால் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதே.

அதிகாரத்தின் அரண்மனைகளில் வசிக்கும் ஆளுமைகள், பசியால் வாடும் மக்களின் குரல்களை இனியும் புறக்கணிக்க முடியாது. இந்தச் சொத்து விவரங்கள் வெளிப்படுதல், மக்களுக்குள் எழுந்திருக்கும் கோபத்தின் எச்சரிக்கை மணி. இதனை உணர்ந்து அரசியல்வாதிகள் தம்மைச் சீர்திருத்திக் கொள்ளாவிட்டால், மக்கள் அவர்களைத் தண்டிக்கும் நாளும் தொலைவில் இல்லை.

## ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

‘ஒரே கையெழுத்து மூலம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம்‘ என வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த தற்போதைய என்பிபி ஆளும்தரப்பால், ஒரு வருடம் கடந்தும் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டினார்.

அனுராதபுரம் விலச்சிய பகுதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆளும்தரப்பு தயாராக இல்லை என்றும், எதிர்க்கட்சி இப்பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் முன்வைக்கும்போது ஒலிவாங்கிகளை துண்டித்து அதைத் தடுப்பதே தற்போதைய ஆளும்தரப்பின் திறமையாக உள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

சபை அமர்வில் நாம் மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும்போது, அது நிலையியற் கட்டளைகளுக்குப் புறம்பானது எனக் கூறுகின்றனர். ஆளும்தரப்பு இவ்வாறு செயற்பட்ட போதிலும் எதிர்க்கட்சி மக்களின் பிரச்சினைகளை எவ்வாறேனும் நாடாளுமன்றத்தில் முன்வைத்து பதில்களைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுத்து வருகிறது‘ என்றும் எதிர்க்கட்சி தலைவர் கூறினார்.

30 வருட விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் போர் முடிந்து பல வருடங்கள் ஆகியும், விலச்சிய பகுதி மக்கள் இன்னும் தங்கள் அன்றாட வாழ்வாதாரத்திற்காகப் போராடி வருகின்றனர். யானை-மனித மோதல்கள், பயிர் சேதம், மற்றும் அறுவடைக்கு நிலையான விலை இன்மை போன்ற பன்முக நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர். அறுவடைக்கு சரியான விலை கிடைக்காததால் அவை வீடுகளில் குவிந்து கிடக்கின்றன. பயிர் சேதத்திற்கோ அல்லது உயிர் இழப்பிற்கோ இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை.

விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பிடம் எந்தவிதமான நடைமுறை சாத்தியமான தீர்வுகளும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சியாக விவசாயிகளுக்காக முடிந்தவரை குரல் கொடுக்கும். விவசாயிகளுக்காக செய்யக்கூடிய அனைத்துப் பணிகளையும் செய்யும் என்று சஜித் பிரேமதாச உறுதியளித்தார்.

60-70 ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வந்த காணிகள் இன்று அரசியல் காரணங்களுக்காக அபகரிக்கப்படுவதாகவும், இதனால் விவசாய சமூகத்தின் வாழ்வாதாரம் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ‘இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இங்கு வந்து தீர்வு வழங்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நாம் மக்களின் மத்தியில் வந்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து வருகிறோம்‘ என்றார்.

தற்போதுதான் பங்கேற்கும் கூட்டங்களில் பொதுமக்கள் கலந்துகொள்ள வேண்டாம் என்று ஆளும் தரப்பினர் அழுத்தம் கொடுத்து வருவதாக எதிர்க்கட்சி தலைவர் குற்றம் சாட்டினார். ’மக்கள் படும் துன்பத்தை இந்த ஆளும்தரப்பு புரிந்துகொள்ளாவிட்டாலும், நாம் புரிந்துகொண்டுள்ளோம். மக்களுக்கு ஏதாவது செய்யும்போது, பொருட்களை விநியோகிக்கும் அரசியலில் ஈடுபடுவதாக நம்மை கேலி செய்கின்றனர். சேவை செய்வதை அரசியலாகக் கருதும் எமது அணுகுமுறைக்கு வரும் விமர்சனங்கள் எமது முயற்சிகளை நிறுத்தாது‘ என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 16 ஆயிரம் பட்டதாரிகளின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன

### தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட் டாலும் 5 ஆண்டுகளில் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய 16,000 பட்டதாரிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இவர்களது பிரச்சினைக்கு ஆளும்தரப்பு துரித தீர்வினை வழங்காவிட்டால் சத்தியாக்கிரகம் அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பு - புறக்கோட்டை தொடருந்து நிலைய வளாகத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் இந்தப் பட்டதாரிகளுடன் வழக்கு தாக்கல் செய்து சட்டத்தரணி என்ற ரீதியில் அவர்களுக்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றேன். அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் காலத்தில் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இணக்கம் காணப்பட்டிருந்தது. அதற்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான வயதெல்லையை 25 இலிருந்து 45 ஆக அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதற்கமைய நீதிமன்றமும் 45 வயது வரை நியமனத்தை வழங்குமாறு தீர்ப்பளித்தது. இந்தப் பட்டதாரிகளில் பெருமளவானோர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்டாலும் பாடசாலைகளில் பாட நேரங்கள் வழங்கப்பட்டு சுமார் 5 ஆண்டுகளுக்கும் மேலாக கற்பித்தலில் ஈடுபட்டவர்களாகவுள்ளனர். இவர்கள் கற்பித்த மாணவர்கள் இன்று ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இது உண்மையில் மனித உரிமை மீறலாகும். கடந்த 5 ஆண்டுகளாக ஆசிரியர்களாகப் பணியாற்றிய 16,000 பட்டதாரிகளுக்கு ஆளும்தரப்பு நினைத்தால் நியமனங்களை வழங்க முடியும். காரணம் சகல மாகாணங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. எனவே மீண்டும் போட்டிப் பரீட்சையை நடத்த வேண்டிய அவசியமில்லை. இது இலகுவாக தீர்க்கப்படக் கூடிய பிரச்சினையாகும். இவர்கள் அரசுத் தலைவரைச் சந்திக்கச் சென்றபோது அதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

கல்வி அமைச்சும் இவர்களுடன் எந்தவொரு பேச்சும் முன்னெடுக்கவில்லை. எனவேதான் இரு வாரங்களாக இவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆளும்தரப்பே இவர்களை இந்த நிலைமைக்கு தள்ளியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் சத்தியாக்கிரகம் அடுத்த கட்டத்துக்குச் செல்லும் என்றார்.

முஸ்லிம்காங்கிரஸ்ஒழுங்குசெய்திருந்தஅவர்களதுகட்சிநிறுவனர்அஷ்ரப்இன் இருபத்தைந்தாவது நினைவு நாள் நிகழ்ச்சியில் பேருரை ஆற்றிய தமிழ் அரசு கட்சி பொது செயலாளர் சுமந்திரன், இரு இனத்தவர்களும் ஒருங்கிணைத்து செயல்பட்டால் மட்டுமே தங்களது தனித்துவத்தோடும் தன்மானத்தோடும் வாழ முடியும் என்று கூறியுள்ளார். பேருரையில் பெரும்பகுதியை கடந்த காலங்களில் இரு இனத்தலைவர்களான அமிர்தலிங்கமும் அஷ்ரப்பும் எவ்வாறெல்லாம் பின்னி பிணைந்து கருத்து தெரிவித்தார்கள் என்பதை நாள்களை மேற்கோள்காட்டிப் பேசினார்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் விடயங்களில், சர்வதேச சமூகத்திற்கு தமிழ் கட்சிகள் அழுத்தம் கொடுத்துவரும் பின்னணியில், ஐந்தாண்டுகளுக்கு முன்னரும், அஷ்ரப் நினைவுப் பேருரையை ஆற்றியிருப்பதை நினைவுகூரும் சுமந்திரன், இரு சமூகங்களின் இணக்கப்பாட்டிற்கு, தானோ, தான் சார்ந்த கட்சியோ அல்லது அப்போது உயிரோட்டத்துடன் இருந்த தமிழ் தேசிய முன்னணியோ இடைப்பட்ட காலகட்டத்தில் சாதித்தது என்ன என்று கூறவில்லை. காரணம் அவ்வாறு எதுவும் தமிழ் தரப்பினர் யாருமே செய்யவில்லை என்பதே உண்மை.

இல்லையென்று சொல்லாமல், செல்வம் அடைக்கலநாதனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதம் குறித்து அனைத்து தமிழ் தரப்புகளும் ஒருங்கிணைந்து செயலாற்றவேண்டும் என்ற எதிர்பார்ப்பு தோன்றிய பின்னணியில், முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமும் மலையக தமிழர் தலைவர் மனோ கணேசனும், அழைப்பின் பேரில் சில முன்னெடுப்புகளைச் செய்தார்கள். அது தவிர்த்து, தமிழ்-முஸ்லீம் இனத்தவரிடையே, குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சில-பல சச்சரவான சம்பவங்கள் நடந்தேறின என்பதே உண்மை. அதில் சுமந்திரன் எந்த பக்கத்தில் இருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். அது



# எது தனித்துவம்?

**என்.சத்திய மூர்த்தி**

சட்டதரணி என்ற ஹோதாவில் மட்டுமல்ல என்பதும் உண்மை. ஹக்கீமும் அப்போதெல்லாம் மௌனியாகவே இருந்தார் என்று நினைவு.

இந்தப் பின்னணியில், அஷ்ரப் பேருரை வழங்க, முஸ்லீம் காங்கிரஸ் சுமந்திரனை அழைத்ததும், அவர் அந்த நிகழ்ச்சியில் அஷ்ரப்இன் பெருமை குறித்துப் பேசியதும் எதிர்வரும் கிழக்கு மாகாண தேர்தலில் கூட்டணி அமைப்பதற்காகத்தான் என்பது பிறந்த குழந்தைக்கும் தெரியும். ஆனால், அதற்காக இந்த முயற்சியையும் முஸ்தீபுகளையும் ஒதுக்கி தள்ளிவிட முடியாது. மாறாக, அந்தகைய கூட்டணியோ, அல்லது வேறு விதமான தேர்தல் அணியோ, எதிர்காலத்திற்கான நல்ல சமிஞ்ஞையாக அமையலாம்.

ஆனால், ஒரு விடயம். இனப்போர் முடிந்து பதினாறு ஆண்டுகள் கடந்த பின்னரும் இன்றளவும், அரச தரப்பினரையும் இராணுவத்தினரையும் குற்றம்சாட்டும் தமிழ் தரப்புகள், விடுதலை புலிகள் அமைப்பின் முஸ்லீம்-எதிர் வன்முறை குறித்து என்ன கூறப் போகிறார்கள்? இது குறித்து, முஸ்லீம் இனத்தவர்களின் அடிநாத கருத்துகளுக்கு அவர்களுடைய அரசியல் தலைமைகள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றாலும், ஒரு தேர்தல் கூட்டணியில் அடிமட்ட தொண்டர்கள் அளவிலான செயல்பாடுகளில் அதன் தாக்கம் தெரியும்.

முன்பு, தமிழ்த் தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை நோக்கி



நகர்வுகளை முன்னெடுப்பதற்கு முன்னர், சுமந்திரன் இது குறித்தெல்லாம் பேசியுள்ளார். ஆனால், தற்போது, தமிழ் அரசுக் கட்சியின் சார்பாக மட்டுமாவது, முஸ்லீம் இனத்தவர்களிடம் மன்னிப்பு கோரும் நிலையை அடைந்த பின்னர், இந்த விடயம் குறித்து அவர் அஷ்ரப் நினைவுப் பேருரையில் குறிப்பிடாதது, குறிப்பிடதக்கது. அதாவது, இந்த விடயங்கள் குறித்து, சுமந்திரன் என்ற தனி மனிதன் அல்ல, தமிழ் அரசு கட்சி முழுமைக்குமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது குறித்து பொது வெளியில் கதைப்பதற்கான தார்மீக உணர்வும், மன உறுதியும் வேண்டும்.

## இரண்டு பங்கு அதிகம்

விடயம் இதோடு நின்றுவிடவில்லை. தமிழ் பேசும் மக்கள் ஒருமித்து செயல்படவேண்டும் என்று அஷ்ரப் பேருரையில் குறிப்பிட்ட சுமந்திரன், மொழி இனங்களை அடையாளம் காட்டுகிறது, ஒருங்கிணைக்கிறது என்றெல்லாம் சாரப்படும்படியும் பேசியுள்ளார். ஆனால், அதே தமிழ் மொழி பேசும் மலையக தமிழ் மக்களையும் அவர்கள் சார்ந்த கட்சிகளையும் மொழி சிறுபான்மை இனமாக அடையாளம் காண அவர் தவறிவிட்டார்.

தனது பேருரையில், தமிழ்-முஸ்லீம் இனத்தவர்களை மட்டும் சேர்த்தாலே, எண்ணிக்கையில், சிங்கள மக்கள் நாட்டின் மக்கள் தொகையில் மூன்று பங்கு அதிகமாக இருப்பார்கள் என்பதையும் சுட்டிகாட்டி உள்ளார். அல்லது, அவரது பேருரையை தாங்கி வந்துள்ள பத்திரிகை செய்திகள் இவ்வாறுதான் கூறி உள்ளன.

இது இப்படித்தான் என்றால், மலையகத் தமிழர்கள் நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களில் ஒரு பகுதி இல்லையா? அல்லது, அவர்கள் பேசும் தமிழ் ஏற்புடையது இல்லையா? உண்மையைச் சொல்லப்போனால், இனப்போரில் இறந்துபட்ட வடக்கு – கிழக்கு தமிழர்கள், மற்றும் இனப்போரை காரணியாக வைத்து, மேலை நாடுகளில் குடிபெயர்ந்தவர்கள் என்றெல்லாம் கணக்கெடுத்தால், ‘இலங்கைத் தமிழ்‘ மக்களின் எண்ணிக்கை எவ்வாறு தொடர்ந்து உயர்ந்து வருகிறது?

அதேசமயம், போரில் இழப்பு, வெளிநாட்டு வாழ்க்கை என்றவாய்ப்புஇல்லாதமலையகதமிழர்களின்எண்ணிக்கை மக்கள் தொகை கணக்கெடுப்பில் திடீரென்று குறைந்தது எவ்வாறு? இதுபோன்றகேள்விகள்கேட்கப்படுவதும்இல்லை. எல்லா விடயங்களையும் ஆய்ந்து, ஆராயும் யாழ்பாண அறிவுஜீவிகள் இது குறித்து எல்லாம் பேசுவதும் இல்லை.

இதில் கொடுமை என்னவென்றால், இன்றளவும் நாடாளுமன்றத்தின் உள்ளேயோ, வெளியேயோ, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்காக அவ்வப்போது குரல் கொடுப்பதில் மலைய தமிழ் தலைவரான மனோ கணேசனே முன்னிற்கிறார். அவரே, செல்வம் அடைக்கலநாதனின் முன்னெடுப்புகளில் உற்சாகமாக பங்கேற்றார்.

மனோ கணேசனும், தலைநகர் கொழும்புவில் வெள்ளவத்தை தமிழர்களின் வாக்குவங்கியை குறிவைத்தே அரசியல் செய்கிறார் என்பது உண்மை. என்றாலும், அவரையும் அவர் சார்ந்த மக்களையும் சுமந்திரன் போன்ற உயரிய எண்ணங்கள் கொண்ட இலங்கை தமிழ் இன தலைவரே கண்டுகொள்ளவில்லை என்றால், யாரைத்தான் குறை கூறுவது?

## வெண்ணை திரளும்போது...

இதற்கிடையே, மத்தியில் ஆளும் அரசுத் தலைவர் அநுரகுமாரவின் ஆட்சியுடன் இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக, தமிழ் அரசு கட்சியின் தலைமை முடிவு செய்துள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம். ஊருக்கு ராஜாவானாலும் தாய்க்கு பிள்ளைதான் என்பது போல், சர்வதேசத்தின் அரவணைப்பும் அனுசரணையும் கிடைத்தாலும், அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, காணாமலாக்கப்பட்டோர் குறித்த விசாரணை மற்றும் பொறுப்புகூறல் விடயத்தில் எல்லாம் தமிழ் தரப்பினர் பதவியில் இருக்கும் ஆளும் தரப்பினருடன்தான் பேச்சு நடத்தவேண்டும்.

இதுவே அடிப்படை உண்மை. ஆனால், கடந்த காலங்களில் எல்லாம் ஆளும்தரப்புடன் பேச்சு நடத்துகிறோம் என்று தொடங்கி, அதனை நீர்த்துபோகச் செய்வதில் தமிழர் தரப்புக் குறியாக இருந்தது என்ற எண்ணம் பரவலாக உள்ளது. அதிலும் குறிப்பாக இனப்போர் நடந்த காலகட்டத்தில், விடுதலை புலிகள் அமைப்பு இதனை ஒரு கலையாகவே மாற்றி இருந்தது.

இனப்போருக்குப் பிந்தைய காலகட்டத்திலும் இதுதானே நிகழ்ந்தது! அப்போதைய மகிந்த ராஜபக்ச ஆளும்தரப்புடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுத் தொடங்கியபோதும், இதுதானே நடந்தது. அப்போது, பேச்சுக்களில் கலந்துகொண்ட ஒரு கூட்டமைப்புத் தலைவர், தனது அலைபேசியை ‘ஆன்‘ செய்து வைத்துவிட்டு, வெளியேயோ, வெளிநாட்டிலேயோ இருந்த ஒன்றோ – பலரோ, அந்தப் பேச்சுக்களை ஒட்டு கேட்க வழி செய்த வண்ணம் இருந்தார்.

அதுபோன்றே பேச்சு முறிந்ததற்கு, 2012ஆம் ஆண்டு ஜெனிவாவில் இலங்கை அரசிற்கு எதிராக அமெரிக்கா முன் வைக்கவிருக்கும் தீர்மானம் தங்களது முயற்சியால் மட்டுமே நடந்தது என்று சுமந்திரனே, கொழும்பு பத்திரிகையாளர் மத்தியில் கூறியதும்தான் காரணம். அரசுடனான பேச்சு ஒரு விதத்தில் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கும்போது, இராணுவத்தினருக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து பேசினால், எந்த அரசுதான் பேச்சைத் தொடர்ந்திருக்க முடியும்?

இதுவே நல்லாட்சி அரசின் காலகட்டத்திலும் நடந்தது. அப்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேயுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிய சுமந்திரன் புதிய அரசமைப்பு சட்ட வரைவு முன்மாதிரியை முடிவு செய்யும்போதே ‘ஏக்கிய‘ எந்த பதத்தினை உள் புகுத்தி, தமிழர் தரப்பிலும், குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலும் எதிர்ப்பைச் சம்பாதித்தார். அவரது எண்ணம் நன்றாக இருந்தாலும், அவர் அவ்வப்போது இதுபோன்று செயலாற்றியிருந்ததால், வெண்ணை திரளும்போது தாழி உடைந்த கதையே தொடர்ந்தது.

## எதிர்பாராத சந்திப்பு

இதுகுறித்து இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கிறது. அண்மையில் நாடாளுமன்றத்திற்குச் சென்ற அரசுத் தலைவர் அநுர, தமிழ் அரசு கட்சி உறுப்பினர் சாணக்கியனோடு கலந்துரையாடி உள்ளார். பத்திரிகை செய்திகளை வைத்து நோக்கும்போது, இருவரும் இனப்பிரச்சினை தொடர்பிலும், தொடர்ந்து பின்போடப்பட்டு வரும் மாகாண சபை தேர்தல் குறித்தும் கலந்தாலோசித்து இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம், அரசுத் தலைவர் அநுர, தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவரான சிறீதரனிடம் இது குறித்து கதைக்கவில்லை. தமிழ் அரசு அல்லாத பிற தமிழ் கட்சி உறுப்பினர்களுடனும் உரையாடவில்லை. பச்சையாகச் சொல்லப்போனால், சுமந்திரனின் பிரதிநிதியாகவே சாணக்கியனை கண்டு கதைத்துள்ளார் என்பது கண்கூடு. சுமந்திரன் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், நாடாளுமன்ற கட்டடத்தில் இதுபோன்ற ‘எதிர்பாராத சந்திப்பு‘ அவருடனேயே இருந்திருக்கும்.

இந்தப் பின்னணியில், தமிழ் அரசுத் தலைமை மத்திய அரசுடன் பேச்சு நடத்தப் போவதாக முடிவு செய்துள்ளது, வரவேற்கத்தக்க விடயம். ஆனால் அதற்குள், உள்கட்சி அமைப்புகளுடன் கலந்து பேசி, ஒவ்வொரு பிரச்சினையிலும் கட்சியின் தீர்க்கமான நிலைபாடு என்ன என்பதை அவர்கள் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். அதைவிட முக்கியம், அரசுடன் பேச்சு நடத்தஇருக்கும் குழுவிற்கு யார் தலைமை ஏற்கவேண்டும் என்பதையும் அவர்களே முடிவுசெய்ய வேண்டும்.

அதாவது, சிறீதரனா, சுமந்திரனா, அல்லது கட்சித் தலைவரான சிவஞானமா, இவர்களில் யார் கட்சியின் தலைமைப் பேச்சாளராக அரசுடன் கதைக்க வேண்டும்? இவர்களில் யாருமே, காலம் சென்ற சம்மந்தன் அளவிற்கு பிரபலமானவர்கள் இல்லை, அவர் அளவிற்கு அறிவும் ஞானமும் இல்லை என்றெல்லாம் கூறுவோர் உள்ளனர். அவரைப் போலவே ஆணித்தரமாக பேசவோ,



காலைக்கதிர் Kalaikkathir

## எனது சொத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தின் பிரகாரம் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான ஆவணங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவுக்கு நான்தான் சமர்ப்பித்தேன்.எனது சொத்து தொடர்பான ஆவணங்களை எவரும் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கவில்லை.

எனது சொத்து விவரங்களை எதிர்க்கட்சியினர் தமது அரசியல் பரப்புரைக்காக தற்போது எடுத்துக்கொண்டுள்ளார்கள். நான் நீண்டகாலமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டேன்.எனது பரம்பரை சொத்துக்களும் உள்ளன.

எனது சொத்துக்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கலாம். முறையான வழியில்தான் இந்தச சொத்துக்களைச் சேர்த்துள்ளேன்.

இதுவரைகாலமும் சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை சமர்ப்பிக்காமல் இருந்தவர்கள் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். ஊடகங்களில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் ஆணைக்குழுவில் முறைப்பாடளியுங்கள் என்று எதிர்க்கட்சிகளுக்கு குறிப்பிட்டுக்கொள்கிறேன் என்றார்.

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான செலவீன பாதீட்டை சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் மன்றில் சமர்ப்பித்தார்.

இரண்டாம்கட்ட அகழ்வுபணிகளின்போது மேற்கொள்ளப்பட்ட 'ஸ்கான்' நடவடிக்கைகள் , மற்றும் பேராசிரியர் சோமதேவாவின் செய்மதி மூல அறிக்கை என்பவற்றின் அடிப்படையில் மனிதப்புதைகுழி காணப்படும் இடங்களுக்கு அண்மையில் மேலும் மனித புதைகுழிகள் காணப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் , மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக 08 வாரகால அனுமதி வேண்டுமென சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் மன்றில் விண்ணப்பம் செய்ததை அடுத்தே வரவு,செலவுத் திட்டம் அளிக்கை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தச் செலவு மதிப்பீட்டிற்கான அனுமதி தொடர்பில் அறிவிக்க வழக்குவிசாரணைகளை ஒக்டோபர் முதல் நாளுக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

செம்மணி மனிதபுதைகுழி அகழ்வுபணிகள் ,முதல்கட்டமாக 09 நாட்களும், இரண்டாம்கட்டமாக 45 நாட்களுமாக ஏற்கனவே 54 நாட்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அகழ்வுப் பணிகளின்போது, 240 மனிதஎலும்புக்கூடுகள் அடையாளம் மீட்கப்பட்டுள்ளன.

## கடற்படையைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உளவுத்துறை பிரதானியான இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனயவுத் திணைக்களத்துக்கு நேற்று அழைக்கப்பட்ட அவர்,விசாரணைகளின் பின்னர் சி.ஐ.டி.யின் சமூக கொள்ளை விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதற்கு முன்னர் கொலைச் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் (தடுத்து வைக்கப்பட்டிருந்த போது) கடற்படையின் புலனாய்வு பிரிவின் பிரதானியான முன்னாள் கடற்படைதலபதி நிஷாந்த உலுகேதென்னவும் கைதுசெயற்பட்டிருந்தார். அவர் செப்டெம்பர் 24 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொல்கஹவல நீதிவான் நீதிமன்றில் இடம்பெறும் இது குறித்த வழக்கில், கேகாலை சாந்தவை கடத்தி திருகோனமலை கன்சைட் சிறைக்கு அழைத்து சென்று சட்ட விரோதமாக சிறைவைத்தபோது, கடற்படையின் புலனாய்வு பிரிவின் பிரதானியாக நேற்று கைது செய்யப்பட்ட ரியர் அத்மிரல் சரத் மொஹட்டியே இருந்தார் என்று சி.ஐ.டியின் விசாரணையில் தெரியவந்துள்ளது. அதன்படியே இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## சுயவிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களைக் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரசபையிலுள்ள பிரச்சினைகளுக்கு அரசுத் தலைவர் தலையிட்டு தீர்வினை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அரசுத்தலைவரின் உரையிலிருந்து அந்த எதிர்பார்ப்பும் பயனற்றது என்பது தெளிவாகியுள்ளது. பொது மக்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தலைவராக அரசுத் தலைவர் பொறுப்புடன் பேசியிருக்க வேண்டும். மாறாக நிறைவேற்றிகாரத்தின் உச்சத்திலுள்ள அவர், மின்சாரசபை ஊழியர்களை மறுசீரமைப்பினை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் சேவையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கூறுகின்றார்.

ஊழியர்களுடன் எந்தவொரு பேச்சும் நடத்தாது, அவர்களுடன் கலந்தாலோசிக்காது மறுசீரமைப்பினை மேற்கொள்ள ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. கடந்த ஆளும்தரப்பில் மின்சாரசபை மறுசீரமைப்பிற்கான சட்டமூலம் முன்வைக்கப்பட்டது. அந்தச் சட்ட மூலத்தை இரத்துச் செய்து மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல் காலத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகராவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதே சட்டத்தையே வரையறுக்கப்பட்ட சில திருத்தங்களுடன் இந்த ஆளும்தரப்பும் முன்வைத்திருக்கிறது.

அது மாத்திரமின்றி பலவந்தமாக இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. எவ்வாறிருப்பினும் இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம் என்றும், ஆளும்தரப்பு பரிந்துரைத்துள்ள சேவையிலிருந்து விலகுவதற்கான தெரிவுக்கு இணங்க வேண்டாம் என்றும் மின்சாரசபை ஊழியர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

காரணம் இந்த ஆளும்தரப்பு நிரந்தரமானதல்ல. எனவே இந்த ஆளும்தரப்பின் கீழ் உங்களுக்குஏதேனும் அநீதி இழைக்கப்பட்டால், எமது ஆட்சியில் அவை நிவர்த்திசெய்யப்படும் என்று உறுதியளிக்கின்றோம். இந்தப் புதிய சட்டத்துக்கமைய மின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பவை தனியார் மயப்படுத்தப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. இது குறித்து உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் 19 ஆவது பக்கத்தில் மிகத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுசீரமைப்பினை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் மக்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். தனியார் முதலீடுகள் வரவேற்கப்படவேண்டும். ஆனால் அதேவேளை தேசிய சொத்துக்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்றார்.

## நிகழ்நிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

12 முன்வைத்தோம்.

தற்போது நடைமுறையில் உள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நீக்குமாறும் அல்லது சகல தரப்பினரதும் பங்கேற்புடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடப்பாடுகளுக்கு அமைவாக அச்சட்டத்தைத் திருத்தியமைக்குமாறும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நடைமுறைக்குவந்த இச்சட்டமானது ஏற்கனவே உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளைப் புறந்தள்ளும் வகையிலும், சிவில் செயற்பாடுகளுக்கான இடைவெளியை மேலும் சுருங்கச்செய்யும் விதத்திலும் அமைந்திருக்கிறது. இச்சட்டம் கடந்த வருடம் முதல் நடைமுறைக்கு வந்ததிலிருந்து மேற்குறிப்பிட்ட மனித உரிமைகள் சார் அச்சுறுத்தல்களும் உண்மையில் அரங்கேறியிருக்கின்றன.

அரசியல்வாதி ஒருவரின் வழிகாட்டலுக்கு அமைவாக ஆளும்தரப்புக்கு எதிராக இணையவெளியில் பரப்புரைகளை முன்னெடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு 2024 பெப்ரவரி மாதம் முதன்முறையாக நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள மட்டுமீறிய அதிகாரங்கள் மற்றும் அதற்கான உறுப்பினர் நியமன முறை, இச்சட்டத்தின்கீழ் குற்றங்களாக வரையறுக்கப்படும் விடயங்களின் பரந்துபட்ட தன்மை, பொருத்தமற்ற தண்டனைகள் மற்றும் தடைகள், போதிய நீதிமன்ற மேற்பார்வையின்மை, மாற்றுப்பாலினத்தவர்கள் மீதான மிகையான தாக்கங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என எமது பரிந்துரைகளில் வலியுறுத்தியுள்ளோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# என் சொத்துக் குறித்து கேள்வி கேட்டவரிடம் என்னைவிட அதிக சொத்து எப்படி வந்தது?

சொத்து விடயத்தில் எதையும் மறைக்கவில்லை.சகல ஆவணங்களையும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன்.சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக என்னிடம் சொத்துக்கள் ஏதும் காணப்படுமாயின் அவற்றை அரசுடமையாக்கி மக்களுக்குபகிர்ந்தளிக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன். எனது சொத்துக்கள் தொடர்பில் கேள்வியெழுப்பிய அமைச்சர் வசந்த சமரசிங்க என்னைவிட செல்வந்தராக உள்ளாரென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது சொத்துக்கள் தொடர்பில் ஜேவிபி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்தன. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் தலைமையில் ஊழல் ஒழிப்பு குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டன. விசாரணைகளுக்கு நாங்களும் முன்னிலையாகியிருந்தோம்.

சொத்துக்கள் தொடர்பில் நாங்கள் எதனையும் மறைக்கவில்லை. கிராமத்துக்குச் சென்று மக்களிடம் நிதி பெற்று நாங்கள் அரசியல் செய்யவில்லை. கப்பம் பெற்றும், பொய்யுரைத்தும் அரசியல் செய்யவில்லை.

2010 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை உரிய நேரத்தில் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன். எனது மனைவியின் சொத்துக்களுடன் என்னை தொடர்புப்படுத்தி ஒரு தரப்பினர் தற்போது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

சொத்து விவரங்களை கடந்த காலங்களில் மறைத்து வைத்தவர்கள்தான் இன்று கலக்கமடைந்துள்ளார்கள். பிறர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக என்னிடம் சொத்துக்கள் ஏதும் காணப்படுமாயின் அவற்றை அரசுடமையாக்கி மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சொத்துக்கள் தொடர்பில் கேள்வியெழுப்பிய அமைச்சர் வசந்த சமரசிங்க என்னைவிடச் செல்வந்தராக உள்ளார். ஏழ்மை நிலையில் உள்ளோம், அணியும் ஆடைகள்கூட பிறர் தந்தவையே என்று குறிப்பிட்டவர்களின் சொத்து மதிப்பு பல கோடிகளாக உள்ளது. நாட்டு

# மன்னார் காற்றாலையை எதிர்த்து கொழும்பில் இன்று போராட்டம்

மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக இன்று பிற்பகல் 2 மணியளவில் கொழும்பில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுகளுக்கு எதிராக மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் நேற்றுடன் 47 நாட்களை பூர்த்தி செய்துள்ளது.

மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல்அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் இன்று பிற்பகல் 2 மணியளவில் அரசுத் தலைவர் செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் மன்னார் மாவட்டத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் புதிதாக அமைக்கப்படவுள்ள 14 காற்றாலை மின் கோபுர வேலைத்திட்டங்கள் அனைத்தும்உடனடியாகநிறுத்தப்படவேண்டும்,

மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் அகழ்விற்கு எவ்வித அனுமதியும் வழங்கக்கூடாது, ஏற்கனவே மன்னார் மாவட்டத்தில் 36 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளமையினால் மன்னார் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். எனவேமக்களின்பிரச்சினைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். ஆகிய 3 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டவுள்ளது.

போராட்டத்தில் தென் பகுதி சிங்கள சகோதரர்களும், மத தலைவர்களும் இணையவுள்ளனர். எனவே குறித்த போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் இணைந்து ஆதரவை வழங்க வேண்டும் - என்றார்.

# ஐக்கிய தேசிய கட்சியின் தீர்மானம் ஐக்கிய மக்கள் சக்திக்கு சவாலல்ல

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தவர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்துவத்தை வகிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு தீர்மானித்துள்ளமையானது இரு கட்சிகளுக்கிடையிலான சமூகமான உறவை மேலும் மேம்படுத்தும். எனவே ஐ.தே.க.வின் இந்த தீர்மானம் எந்த வகையிலும் எமக்கு சவாலானதாக அமையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.க. செயற்குழு எடுத்துள்ள தீர்மானம் குறித்து வினவிய போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்துள்ளவர்களுடன் சுமூகமான உறவைப் பேணுவதற்காகவே ஐ.தே.க. இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது என நம்புகின்றோம். எவ்வாறிருப்பினும் நாம் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்தவர்களாகவுள்ளோம்.

எனவே ஐ.தே.க.வின் தீர்மானம் தொடர்பில் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஒற்றுமையுடன் செயற்படுவதற்கு நாம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு உந்துதல் அளிக்கும் வகையிலேயே ஐ.தே.க. இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

ஐ.தே.க. என்பது எமது சகோதர அரசியல் கட்சியாகும். நாம் அக்கட்சியிலிருந்து விலகியே ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினோம். கொள்கை ரீதியான காரணிகளில் சில முரண்பாடு;கள் மாத்திரமே எமக்குள் காணப்படுகின்றன.

ஆனால் எமது இரு கட்சிகளினதும் இலக்கு ஒன்றாகவே காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமெனில் ஒரே கொள்கையும் இலக்கும் கொண்ட கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக ஒன்றிணைந்துள்ள நாம், எதிர்காலத்தில் அரசியலுக்காக எவ்வாறு ஒன்றிணைவது என்பது குறித்து சிந்தித்து தீர்மானங்களை எடுப்போம். இதில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்புரிமை என்ற விடயம் தேவையற்றது. நாம் ஐக்கிய மக்கள் சக்தியினராக எமது நடவடிக்கைகளை முன்னெடுப்போம். எவ்வாறிருப்பினும் இந்த தீர்மானம் இரு கட்சிகளுக்கிடையிலான சுமூகமான உறவை மேலும் மேம்படுத்தும்.

ஆளும்தரப்பு செல்லும் பாதை யாருக்கும் மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. கிராம மட்டத்திலுள்ள மக்களிடம் இதனைக் கேட்டு அறிந்து கொள்ள முடியும். எதிர்க்கட்சிகள் மீதான அடக்குமுறைகளை விடுத்து பாதாள உலகக் குழுவின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றோம் என்றார்

# சர்வதேசப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலின வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர் ஜூலி டுபேகன்னன்,தமிழ்சிவில்சமூகஅமையத்தின் ஸ்ரீ ஞானேஸ்வரன் (நிகழ்நிலை ஊடாக) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அவர்கள் உள்ளகப்பொறிமுறைகள் மூலமாகவன்றி, சுயாதீன சர்வதேச விசாரணைகளின் ஊடாக மாத்திரமே இலங்கையில்இடம்பெற்றமீறல்கள்தொடர்பில் பொறுப்புக்கூறலைஉறுதிசெய்யமுடியும்என்ற விடயத்தைப் பொதுவாக வலியுறுத்தினர்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து சுட்டிக்காட்டிய ருக்ஷா சிவானந்தன், உள்நாட்டில் தொடரும் தண்டனைகளிலிருந்துவிடுபடும்போக்கைமுடிவுக்குக் கொண்டுவருவதற்குசர்வதேசபொறுப்புக்கூறல் செயன்முறையொன்று உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் தப்பிப்பிழைத்தோரின் நம்பிக்கையை வென்றெடுத்ததும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறவைக்கக்கூடியதும், தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கக்கூடியதுமான சர்வதேச சுயாதீன விசாரணை மற்றும் வழக்குத்தொடரல்பொறிமுறையைவிரைவாக உருவாக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை நிகழ்நிலை முறைமையில் உரையாற்றிய வடமாகாணத்தைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழ் சிவில் சமூக அமையத்தின் செயற்பாட்டாளர் ஸ்ரீ ஞானேஸ்வரன், 1948 ஆம் ஆண்டு முதல் தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கை ஆளும்தரப்புகளால்முன்னெடுக்கப்பட்டுவரும் இனவழிப்புப் போர், இனவழிப்பு கலவரம், இனப்படுகொலை,அரசஅனுசரணையுடனான கண்காணிப்பு, ஒடுக்குமுறை, அத்துமீறல், கைது, வன்முறை, சித்திரவதை, பௌத்த மயமாக்கல், இராணுவ மயமாக்கல், சிங்கள மயமாக்கல், வலிந்துகாணாமலாக்கப்படல்கள், காணி சுவீகரிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கமளித்ததுடன் அவை இப்போதும் தொடர்வதாக விசனம் வெளியிட்டார்.

அதுமாத்திரமன்றி அண்மையில் கண்டறியப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழிவிசாரணை,நம்பகத்தன்மை வாய்ந்ததும், சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணைப்பொறிமுறையொன்று உடனடியாக நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று இதுகுறித்து கருத்துரைத்த சர்வதேச குற்றவியல் வழக்கறிஞர் அலைன் வேனர், தமிழ் மக்களின் மீண்டெழும் தன்மையைப் பாராட்டியதுடன் நீதிக்கான தொடர் போராட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினார். அத்தோடு இலங்கை தொடர்பானபொறுப்புக்கூறல்செயற்திட்டத்தின் ஊடாக ஆதாரங்களைத் திரட்டுவதற்கான ஐ.நாவின் முயற்சியை அங்கீகரித்த அவர், இருப்பினும் சர்வதேச சுயாதீன விசாரணையின் ஊடாக மாத்திரமே அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை அடையமுடியும் என்றார்.

மேலும் ஆதாரங்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட முழுமையான வழக்கு கோப்புகளை தயாரிக்கவேண்டிய முக்கிய வகிபாகத்தை தமிழ்ச் சமூகம் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய அலைன் வேனர், பல்வேறு தேசிய நீதிமன்றங்கள்மற்றும்சட்ட ஏற்பாடுகள்ஊடாக தமிழர்களின்நீதியைக்கோரும்செயன்முறை தொடரவேண்டும் என வலியுறுத்தினார்.

அடுத்து, 'பொறுப்புக்கூறல் சார்ந்த முயற்சிகளை சீராக வடிவமைப்பதில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும், தப்பிப்பிழைத்தோருக்கும் முக்கிய பங்குண்டு. குறிப்பாகசான்றுகளைஆவணப்படுத்துவதிலும், நீதியை முன்னிறுத்திய பேச்சுக்களை முன்னெடுப்பதிலும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் தனிப்பட்ட அச்சுறுத்தல்களுக்குமத்தியிலும்முன்னரங்கில் நின்று பணியாற்றுகின்றனர்' என சர்வதேச சட்டத்தரணி மரியம் பொஸ்டி தெரிவித்தார்.

# சீன நாட்டவரின் சடலம் மீட்பு

தெஹிவளையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து கீழே விழுந்து இறந்ததாக சந்தேகிக்கப்படும் சீன நாட்டவரின் சடலம் தெஹிவளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தெஹிவளை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தொலைபேசி அழைப்பை அடுத்து தெஹிவளை அல்விஸ் வீதியில் உள்ள ஒரு வீட்டின் பின்னால் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நாட்டில் தனியார் துறையில் பணிபுரியும் சீன நாட்டினர் குழு ஒன்று இந்த வீட்டிற்கு அருகிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் தங்கியிருந்ததாகவும், குறித்த நபர் மேல் மாடியில் இருந்து விழுந்து இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் தற்போது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை



நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# பெருமாளுக்கு உகந்த புரட்டாசி விரதம் பற்றிய தகவல்கள்...

ஒவ்வொருநொடியும்ஒவ்வொருநிமிடமும்ஒவ்வொரு மணியும் இறைவனுக்கு உகந்ததுதான் என்றாலும் புரட்டாசிக்கு எப்போதுமே தனி மகத்துவம் உண்டு. காக்கும் கடவுளான பெருமாளுக்குப் பிரியமான மாதம் இது. புரட்டாசி விரதம், நவராத்திரி விரதம் என்று விரதங்கள் அணிவகுக்கும் மாதமும் இதுதான்.

வருடம்முழுக்கசனிக்கிழமைகளில்விரதம்இருக்கத் தவறியவர்கள் புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் இருந்தால் ஆண்டு முழுவதும் விரதம் இருந்த பலன் கிட்டும்என்பதுநம்பிக்கை. புரட்டாசிசனிக்கிழமைகளில் பெருமாளுக்கு விரதம் இருந்தால் அல்லவை நீங்கி நல்லவை சேரும், வளமான வாழ்வு வசப்படும் என்பது ஐதீகம். தடைகள் அகன்று சர்வமங்களம் அமையப்பெறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. அதனாலேயே புரட்டாசி மாதம் ‘பெருமாள் மாதம்’ என்று சிறப்பிக்கப்படுகிறது.




### ஏன் புரட்டாசி சனி?

புரட்டாசி மாதத்தை எமனின் கோரைப்பற்களுள் ஒன்றாகக் கூறுகிறது அக்னி புராணம். எம பயம் நீங்கவும், துன்பங்கள் விலகி நன்மைகள் கூடவும் புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் விரதம் இருப்பார்கள். புரட்டாசி விரதத்துக்கும் வழிபாட்டுக்கும் இன்னுமொரு காரணமும் உண்டு. சனி பகவான் புரட்டாசிமாதத்தில்தான் அவதரித்தார். சனிபகவானால் விளையும் கெடுபலன்களைக் குறைப்பதற்காகக் காக்கும் கடவுளுக்கு சனிக்கிழமை விரதம் இருக்கும் வழக்கம் தொடங்கியது.

புரட்டாசிசனிக்கிழமைகளில்அனைத்துப்பெருமாள் கோயில்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும். 108 திவ்ய தேசங்களும் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். திருப்பதி போன்றமுக்கியதலங்களில்பிரம்மோற்சவமும் திருக்குடை சமர்ப்பிக்கும் வைபவமும் நடைபெறும். சிலர் புரட்டாசி மாதத்தில்தான் தங்கள் நேர்த்திக் கடன்களையும் குலதெய்வ வழிபாடுகளையும் நிறைவேற்றுவர்.

வீடுகளில் விரதம் இருப்பவர்கள் நெற்றியில் திருநாமம் இட்டு, மாவிளக்கேற்றி, வடை பாயசத்துடன் அமுது சமைத்துப் படையலிட்டுப் பூஜையை நிறைவேற்றுவர். சிலர் தங்கள் குடும்ப வழக்கப்படி தங்கள் பகுதியில் உள்ள வீடுகளில் மடியேந்தியோ, உண்டியல் குலுக்கியோ தானம் பெற்று அதில் கிடைக்கும் அரிசியில் பொங்கலிட்டு வழிபடுவர்.

### பெருமாளுக்கு மண்சட்டியில் நிவேதனம்

பெருமாள் கோயில்களில் சிறப்பு மிக்கதாகக் கருதப்படுவது திருப்பதி தலம். அத்திருத்தலத்துக்கு அருகில்முன்னொருகாலத்தில்பீமன்என்னும் குயவர் வாழ்ந்துவந்தார். அவர் பெருமாள் பக்தர். ஒவ்வொரு சனியும் விரதம் இருப்பதாகச் சங்கல்பம் எடுத்துக் கொண்டார். தொடர்ச்சியான வேலைகளால் விரதம் இருக்க முடியவில்லை. கோயிலுக்குச் சென்றாலும் நின்று நிதானித்து வழிபட மாட்டார். சம்பிரதாய முறைப்படி வழிபடுவதும் அவருக்குத் தெரியாது. ‘பெருமாளே நீயே எல்லாம்’ என்பதை மட்டும் மந்திரம் போல உச்சரித்துவிட்டு வந்துவிடுவார்.

நாட்கள் செல்லச் செல்ல கோயிலுக்கும் தொடர்ந்து செல்ல முடியாத நிலை. அதனால் பெருமாளை வீட்டுக்கே அழைத்து வழிபடுவது என்று பீமன் முடிவு செய்தார். அவர் குயவர் என்பதால் களிமண்ணால் பெருமாள் சிலையை வடித்தார். பெருமாளுக்கு அலங்காரம் செய்யவோ, ஆபரணங்கள் வாங்கவோ அவரிடம் பொருள் இல்லை. அதனால் களிமண்ணையே சிறு சிறு உருண்டைகளாக்கி அவற்றை மாலைபோல் தொடுத்துப் பெருமாளுக்கு அணிவித்து மகிழ்ந்தார்.

அந்த ஊரின் அரசன் தொண்டைமானும் பெருமாள் பக்தர். ஒவ்வொரு சனிக்கிழமையும் அவர் விரதமிருந்து பெருமாளுக்குத் தங்க மாலை அணிவித்து வழிபடுவார். ஒருநாள் காலை அவர் கோயிலுக்குச் சென்றபோது தங்க மாலை மறைந்து, மண் மாலை இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். என்ன தவறு நிகழ்ந்திருக்கும் என்ற யோசனையுடனேயே உறங்கினார். கனவில் தோன்றிய பெருமாள், பீமன் குறித்தும் அவருடைய பக்தியைக் குறித்தும் அரசனுக்கு அறிவித்தார்.

பீமனின் பக்தியைப் பெருமாள் வாயாலேயே கேட்டறிந்த மன்னன், பீமனின் குடிசைக்குச் சென்றார். அவருக்குப் பொன்னும் பொருளும் வாரிவழங்கினார். ஆனால் அந்தப் பொருட்களில் எல்லாம் மயங்காமல் இறுதிவரை பெருமாளையே துதித்து, முடிவில் வைகுண்டப் பதவி அடைந்தார். பீமன் என்னும் அந்தக் குயவனின் பக்தியைப் பறைசாற்றும் வகையில் இன்றுவரை பெருமாளுக்கு மண்சட்டியில்தான் திருவமுது படைக்கப்படுகிறது.



# 76 ஆண்டுகளாக வேறு எந்தத் தொழிலுக்கும் செல்லாது அரசியல் செய்தவரிடம் எப்படி கோடிக் கணக்கில் சொத்து?

## அமைச்சர் சமரசிங்க குறித்து முன்னாள் அமைச்சர் அமரவீர கேள்வி

மக்களிடம் வறுமைப் பாடல் பாடிக் கொண்டிருந்தவர்கள் தற்போது தனவந்தர்களாகியுள்ளனர். எந்தவொரு தொழிலும் இன்றி முழு நேர அரசியலில் ஈடுபட்ட ஜேவிபியினருக்கு இந்நாட்டு மக்கள் 76ஆண்டு காலம் சாபத்தை அனுபவித்ததாகக் கூறுவதற்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாதென முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது ஆளும்தரப்பு ஆட்சியமைத்ததன் காரணமாகவே அரசியல்வாதிகளின் சொத்து விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக சில அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். 2023ஆம் ஆண்டு எமது ஆளும்தரப்பால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்தின் ஊடாகவே இந்த விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆளும்தரப்பிற்கு நினைவுபடுத்துகின்றேன். ரணில் விக்கிரமசிங்க ஆளும்தரப்பில் நாம் அங்கத்துவம் வகித்த அமைச்சரவையில் நீண்ட கலந்தாலோசனையின் பின்னர் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் நாமும் எமது சொத்து விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றோம். தற்போது அவை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே இது இந்த ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை எனக் கூறினால் அது முற்றுமுழுதாக உண்மைக்கு புறம்பானதாகும்.

இது இவ்வாறிருக்க தற்போது அமைச்சர்களின் சொத்து விவரங்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றன. வாழ்நாள் முழுவதும் அரசியலில் ஈடுபட்டு வேறு எந்தத் தொழிலும் செய்திருக்காத அமைச்சர் வசந்த சமரசிங்க போன்றோரின் சொத்து மதிப்பு பல கோடிகளாகும்.

76 ஆண்டுகள் சாபகாலம் எனக் கூறியவர்கள் அந்தக் காலப்பகுதியில் அரசியல் ஊடாக மாத்திரம் இவ்வாறு கோடிக்கணக்கான சொத்துக்களை சேமித்திருக்கின்றனர். மக்களிடம் வறுமைப் பாடல் பாடிக்கொண்டிருந்தவர்கள் தற்போது தனவந்தர்களாகியுள்ளமை எமக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. எனவே இனியும் 76 ஆண்டுகளாக நாடு சீரழிக்கப்பட்டதாகக் கூற வேண்டாம் என்றார்.

# பாடசாலை நேரங்களிலும் இனிமேல் கனிமப் போக்குவரத்துக்கு அனுமதி

பாடசாலை நேரங்களில் கனிமப் போக்குவரத்துக்கான தடை நீக்கப்பட்டுள்ளது. கட்டுமானத் துறையின் வேண்டுகோளை ஏற்று ஆளும்தரப்பு புதிய நிபந்தனைகளுடன் இத்தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை நாட்களில் காலை 6:30 மணி முதல் 7:45 மணி வரையிலும், நண்பகல் 11:30 மணி முதல் 2:30 மணி வரையிலும் கனிமங்களை (மணல், கற்கள், போன்றவை) கொண்டு செல்லும் வாகனங்களுக்கான தடையை நீக்கி, புதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

கட்டுமானத் துறையினர் விடுத்த வலுவான வேண்டுகோள்களை ஏற்று இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக பொது அறிவிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. நண்பகல் நேர போக்குவரத்து கட்டுப்பாடுகளால் கட்டுமானப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக அவர்கள் முறையிட்டுள்ளனர். தொழில்துறையினர் எதிர்நோக்கிய சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

புதிய நிபந்தனைகளின்படி, குறிப்பிட்ட நேரங்களில் பாடசாலைகள் மற்றும் மாணவர்கள் கடக்கும் பாதைகளுக்கு அருகில் கனிமப் போக்குவரத்து மேற்கொள்ளும்போது, வாகனங்கள் கடும் பொலிஸ் கண்காணிப்பின் கீழ் செல்ல வேண்டும். மேலும், வேகக் கட்டுப்பாடுகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல், பாடசாலை நாட்களில் காலை 6:30 மணி முதல் 7:45 மணி வரையிலும், நண்பகல் 11:30 மணி முதல் 2:30 மணி வரையிலும் கனிமப் போக்குவரத்துக்கான திருத்தப்பட்ட நிபந்தனைகளை வாகனங்கள் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிமப் போக்குவரத்து வாகனங்களின் பொறுப்பற்ற ஓட்டுநர்களால், பாடசாலை வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து, கடந்த 4ஆம் திகதி முதல் இந்த நேரங்களில் கனிமப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2025இல் வெளியிடப்பெற்றது